DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.154/2024**

Deposition of Witness : RW -3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தவமணி. | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 14.07.20026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 02.59 பி.ப

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 01.12.2024ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும் எனது மனைவியும் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு போவதற்காக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஆசாரிபட்டி ரோட்டில் சென்றுக்கொண்டிருந்தபோது ஆரோக்கியா சேவா நிலையம் அருகே வந்தபோது எங்கள் பின்னால் வந்த இருசக்கர வாகனம் எங்களது மீது லேசாக உரசியதில் நாங்கள் இடது பக்கம் விழுந்துவிட்டோம். அவர் சுமார் 100 அடி தாண்டி சென்று விழுந்துவிட்டார்கள். அந்த வாகனத்திலும் இரண்டு நபர்கள்தான் வந்தார்கள். அவர் வாகனத்தை எப்படி ஓட்டி வந்தார் என்று தெரியாது. ஆனால், அவர் எங்களை முந்தி செல்ல வேகமாக வந்தார். அவர் எதனால் வேமாக வந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஆனால், அவர்கள் அங்கன்வாடி ஆசிரியர் என்பதால் 09.00 மணிக்கு வேலைக்கு போக வேண்டும் என்று அவசரமாக வந்திருக்கலாம். அந்த வாகனத்தில் இருந்த பெண் வாகனத்தின் வலது பக்கவாட்டில் விழுந்துவிட்டார். அந்த வாகனத்தின் பதிவெண் தெரியாது. அது ஹோண்டா சைன் வாகனமாகும். அவர்களில் மகன் தலைக்கவசம் அணிந்திருந்தார். அம்மா தலைக்கவசம் அணியவில்லை.

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.14 18:15:46 +0530

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்கு இந்த வழக்கில் அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நான் அறிவிப்பை பெற்றுக்கொண்டு இது வரை நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் எனது வழக்கறிஞர் பார்த்துக்கொள்கிறார். எனக்கு ஸ்ட்ரோக் பாதிப்பு உள்ளது. தற்பொழுது அழைப்பாணை பெற்றுதான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சம்பந்தமாக என் பெயரில்தான் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால், விபத்து நடந்தவுடன் போலீசார் வந்து என்மீது தவறில்லை என்று சொன்னார்கள், பின்பு 2 நாட்கள் கழித்து வழக்கு முழுவதும் என்மீதுதான போட்டுள்ளார்கள். இறுதியறிக்கை என்மீதுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியும். ஆண்டிபட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். விபத்தில் நான் எந்த வித சைகையும் செய்யாமல் திடீரென வலது திருப்பியதால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எனது தவறால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இந்த விபத்தைதான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதியறிக்கையில் போலீசார் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. இவ்விபத்திற்கு எனது தவறுகைதான் காரணம் என்பதால் எனது வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம்தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல, என்மீது எந்த தவறும் இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 03.11 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.14 18:15:57 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 14.07.2026